

# புவியியல்

## முதலாம் தவணை

# சூழல் பல்வகைமையும் புவியியலும்

## தரம் 6

புவியியல் - முதலாம் தவணை - சூழல் பல்வகைமையும் புவியியலும் (த) - தரம் 6
භූගෝල විද්‍යාව - පළමු වාරය - පරිසර විවිධත්වයෙන් භූගෝල විද්‍යාවට (දෙ) - 6 ශ්‍රේණිය
SC06EC1T -2026/313/82,400

சமூக விஞ்ஞானங்கள் துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
www.nie.ac.lk
அச்சிடலும் விநியோகமும் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව විසින් සකස් කරන ලද වීඩියෝ ඊ - තක්සලාව වෙබ් අඩවිය හා යූටියුබ් චැනලය මඟින් නැරඹිය හැකිය.
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் ஆக்கப்பட்ட வீடியோக்களை e- Thaksalawa இன் இணையத்தளம் மற்றும் youtube அலைவரிசைகளினூடாகப் பார்வையிட முடியும்.
Videos produced by the Educational Publications Department can be viewed via the website and the YouTube channel of e – thaksalawa.

The National e-learning Portal for The General Education

https://www.e-thaksalawa.moe.gov.lk/

https://youtube.com/c/ethaksalawa-official

නැණස TV | நெனச TV

https://moe.gov.lk/students/nenasa-tv/

අන්තර්ක්‍රියාකාරී පාඩම්, වීඩියෝ පාඩම්, ශ්‍රව්‍ය ඉගෙනුම් ආධාරක, ක්‍රියාකාරකම් පත්‍රිකා, මාර්ගගත ප්‍රශ්නාවලි, පෙළපොත, අධ්‍යාපනික විනෝදාත්මක වැඩසටහන්, මාර්ගගත පාඨමාලා ඇතුළු තවත් අධ්‍යාපනික වැඩසටහන් සඳහා පිවිසෙන්න.
ஊடாடும் பாடங்கள், வீடியோப் பாடங்கள், செவிப்புல கற்றல் உதவிகள், செயலட்டைகள், நிகழ்நிலை வினாக்கள், பாடநூல்கள், கல்விசார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நிகழ்நிலை பாடநெறிகள் உட்பட மேலும் கல்விசார் நிகழ்ச்சிகளின் நிமித்தம் பிரவேசியுங்கள்.
Access for interactive lessons, video lessons, audio learning aids, activity sheets, online quizzes, textbooks, educational entertainment programs, online courses and more educational programs.

National Institute of Education
ChannelNIE

ජාතික අධ්‍යාපන ආයතනය
தேசிய கல்வி நிறுவகம்

වීඩියෝ වැඩසටහන්, පෙරහුරු ප්‍රශ්න පත්‍ර, ප්‍රායෝගික පරීක්ෂණ සහ සම්පත් පොත් යනාදී වටිනා අධ්‍යාපනික සම්පත් සඳහා පිවිසෙන්න
வீடியோ நிகழ்ச்சிகள், பயிற்சி வினாத்தாள்கள், செய்முறைச் சோதனைகள், வளநூல்கள் போன்ற பெறுமதியான கல்விவளங்களுக்காக பிரவேசியுங்கள்
Visit us for valuable educational resources; video programs, practice question papers, practical tests and resource books

நம் நாட்டு இளம் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இம்மொடியுலை
அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற்
கவனமாக வைத்துப் படியுங்கள்.

பாடசாலையின் பெயர் :- ..............................................................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2026 | | | |
| 2027 | | | |
| 2028 | | | |
| 2029 | | | |

# புவியியல்

## முதலாம் தவணை

## சூழல் பல்வகைமையும் புவியியலும்

# தரம் 6

சமூக விஞ்ஞானங்கள் துறை,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
*www.nie.ac.lk*

அச்சிடலும் விநியோகமும் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

புவியியல், தரம் 6

முதலாம் தவணைக்கான மொடியூல்

**சூழல் பல்வகைமையும் புவியியலும்**

முதற்பதிப்பு : 2025

ISBN : 978-624-6792-38-1

© தேசிய கல்வி நிறுவகம்

வெளியீடு : தேசிய கல்வி நிறுவகம் (முழுப்பதிப்புரிமையுடையது)

சமூக விஞ்ஞானங்கள் துறை,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.

www.nie.ac.lk

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்*
*இல. 35/3, கேரகல வீதி, கந்துபொட, தெல்கொடையில்*
*அமைந்துள்ள சென்வின் தனியார் நிறுவனத்தில்*
*அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டது.*

Published by : National Institute of Education
Printed by : Sanvin (Pvt) Ltd.
No. 35/3, Keragala Road, Kanduboda, Delgoda.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் காத்திரமான மறுசீரமைப்பு முயற்சியானது கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சிகள் சார்ந்த கற்றல், பகுத்தறிவுச் சிந்தனை, ஆக்கத்திறன், 21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழினுட்ப முனைப்பு, விழுமியப் பிரசைத்துவம் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகையில் கலைத்திட்டம், கற்றல்-கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம், இந்தக் கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்படையாக அமைந்துள்ளது.

கல்வியியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினர்களுடனான உடனுழைப்பு சார்ந்த உரையாடல்களின் ஊடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டில் தரம் 1 இலும் தரம் 6 இலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டங்களினதும் உரிய கற்கைச் சாதனங்களினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட கரிசனையுடன் செயற்பட்ட பிரதமர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும் போன்றோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. மேலும், இப்பணியின் போது விசேட கரிசனையுடன் செயற்பட்ட, தேசிய கல்வி நிறுவகத்தின் தாபனப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் நினைவு கூருகின்றேன்.

இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவகப் பணியணியினர் அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

**பேராசிரியர் மஞ்சுளா வித்தானபதிரண**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
2025.08.11

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

தற்போதய உலகம் மிகவேகமாக முன்னேறி வருகின்றது. அதற்கேற்றவாறாகப் பாடசாலை மாணவர்களை நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களுடன் தயார்படுத்துவது, கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் தலையாய பொறுப்பாகும். அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டத்திற்கு அமைய மொடியூலின் அடிப்படையிலான கற்றல் முறையை அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை ஒரு சிறப்பான வெற்றியாகும் என்பதை இங்கு வலியுறுத்திக் கூற வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கற்றல் சாதனங்கள், விமர்சனரீதியான சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதன் மூலம் சிக்கலான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கண்டறிதல், பல்வேறு கோணங்களிலும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் தர்க்க ரீதியாக முடிவுகளையெடுத்தல் போன்ற திறன்களை வலுப்படுத்தப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

நற்குணமும் நல்லறிவும் நிறைவாய்ப்பெற்ற மாணவர் பரம்பரையின் நற்கனவுகளை நனவாக்க, இந்தக் கற்றல் சாதனங்களை ஓர் ஒளிவிளக்காகப் பயன்படுத்தும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். மொடியூல் மற்றும் செயல்நூல்களையாக்கும் சிறப்பான பணிக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டீ. ஏ. சுபாஷிணீ தெமட்டகொட**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய, பத்தரமுல்லை.
2025.08.11

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

எமது நாட்டின் புதிய கலைத்திட்டம், மாறிவரும் உலக மற்றும் நாட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல் காலத்திற்குக்காலம் மாறிவருகின்ற உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து, நிலைபேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேற்கிழம்பச் செய்கின்றது. தற்போதைய கலைத்திட்டத்தில் புதுப்பித்தல்களையும் புதிய பாடங்களையும் அறிமுகப்படுத்துவதன் மூலம், கற்றல் - கற்பித்தல் செயல்முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது. 2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கலைத்திட்டத்திற்கு இணங்க, ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் அடிப்படையிலான மொடியூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மொடியூல் மாணவர்களுக்கான புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப் பட்டுள்ளதோடு, இச்செயற்பாடுகளின் ஊடாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும், இந்த மொடியூல்கள் சுய கற்றலுக்கு அவசியமான சூழலை உருவாக்குகின்றன. இவற்றின் ஊடாக மாணவர்கள் பாட உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவதோடு, பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். இக்கற்றற் சந்தர்ப்பங்கள் 21ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (Literacy) ஆளிடைத்தொடர்புத் திறன்கள், (Interpersonal skills) மற்றும் விழுமியங்கள் (Values) முதலியவற்றை வலுப்படுத்துவதற்குப் பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொடியூலிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களோடு, மாணவர்கள் தாங்கள் அடைந்த செயல்திறன் மற்றும் கல்வி இலக்குகளைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், யதார்த்தமான கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதல்களைஇம்மொடியூல்கள் வழங்குகின்றன.

மொடியூல் அடிப்படையிலான கற்றல் முறைகளை உருவாக்குவதில் முதன்மைப் பணிகளை மேற்கொண்ட, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் போன்றோரின் அர்ப்பணிப்பான சேவையினை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இம்மொடியூல்கள் கலைத்திட்டத்தின் ஊடாக வெளியிடப்படும் இவ்வேளையில் அவர்களது பங்களிப்பினை மனமாரப் பாராட்டுகிறோம். மேலும், இம்மொடியூல்களைத் தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய பணியணியினர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினையும் நாம் மகிழ்ச்சியுடன் நினைவு கூருகிறோம். இந்த மொடியூல்களைப் பயன்படுத்தும்போது நீங்கள் பெறும் அனுபவங்களும் ஆலோசனைகளும் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே, எதிர்கால மொடியூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கலாநிதி எஸ்.ஏ.டி. சமரவீர**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம, இலங்கை.
2025.08.08

# ஆலோசனை, எழுத்து மற்றும் பதிப்பாளர் குழு

**ஆலோசனை**

| | | |
|---|---|---|
| பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரண | : | பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| கலாநிதி தர்ஷன சமரவீர | : | பிரதிப் பணிப்பாளர் நாயகம்,<br>மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**மேற்பார்வை**

| | | |
|---|---|---|
| திருமதி D.H.C.N. தர்மபால | : | பணிப்பாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**ஒருங்கிணைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. D.W.G.J. பண்டார | : | விரிவுரையாளர்,<br>சமூக விஞ்ஞானங்கள் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**எழுத்தாக்கம்**

| | | |
|---|---|---|
| திருமதி J.K. நில்மினி உதயகாந்தி | : | ஆசிரியர், ஆண்கள் (மாதிரி) பாடசாலை,<br>மாலபே. |
| திரு. W.N. சமிந்த | : | ஆசிரியர், சுபதர்ம வித்தியாரத்ன பிரிவெனா,<br>நுகேகொடை. |

**பதிப்பு**

**உள்வாரி :**

| | | |
|---|---|---|
| திருமதி M.P.R. தனவர்தன | : | பிரதிப் பணிப்பாளர் நாயகம்,<br>ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பீடம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. D.W.G.J. பண்டார | : | விரிவுரையாளர்,<br>சமூக விஞ்ஞானங்கள் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. க.அறிவழகன் | : | விரிவுரையாளர்,<br>சமூக விஞ்ஞானங்கள் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**வெளிவாரி :**

| | | |
|---|---|---|
| தகைசார் பேராசிரியர் N.K.தங்கல்ல | : | புவியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம். |
| திரு.R.P.பீரிஸ் | : | மேலதிக ஆணையாளர்(ஓய்வு),<br>பரீட்சைகள் திணைக்களம். |
| திரு. H.M.J.A.ஹீன்கந்த | : | ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு),<br>வலய கல்விக் காரியாலயம், கண்டி |
| B.N.R.D. பஸ்நாயக்க | : | ஆசிரிய ஆலோசகர்<br>வலய கல்விக் காரியாலயம், கண்டி |

**மொழித்தழுவலும் பதிப்பும்**

| | | |
|---|---|---|
| திரு. க.அறிவழகன் | : | விரிவுரையாளர்,<br>சமூக விஞ்ஞானங்கள் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**மொழிபெயர்ப்பு**

| | | |
|---|---|---|
| திருமதி உ.ஜெயராமன் | : | ஆசிரியர், கதிரேசன் மத்திய கல்லூரி,<br>நாவலப்பிட்டி. |
| திரு.செ.விக்னேஷ்வரன் | : | ஆசிரியர், ஹ/வட்டவளை த.ம.வி, ஹட்டன். |

**சரவை நோக்கு (மொழி)**

| | | |
|---|---|---|
| கலாநிதி.க.சந்திரமோகன் | : | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>மொழித்துறை,<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம். |
| திருமதி அ. வினோதினி | : | சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம். |

**கணனி உதவி**

| | | |
|---|---|---|
| திரு.சந்திரமோகன் | : | ஆசிரியர், ஹ/லொனக் த.ம.வி, வட்டவளை |

## அறிமுகம்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக, ஆறாம் தரத்துக்குத் தயாரிக்கப்பட்ட இந்த மொடியூலானது, புவியியல் பாடத்தை கற்பதற்குத் தேவையான அணுகுமுறையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதனை அடைய விடயத்துடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக்கருக்களான பிரதேசம், அமைவிடம், பரப்பு, இடம் மற்றும் இடைத்தொடர்புகள் பற்றி விளக்கப்படுகிறது. இந்த மொடியூலில் சூழல் பல்வகைமையும் புவியியலும், பிரதேசத்தின் அமைவிடம் போன்ற எண்ணக்கருக்களை குறித்த தவணையுள் நிறைவு செய்யும் வகையில் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டுத் திறன்களை அடையக்கூடிய வகையில் இதிலுள்ள அனைத்துச் செயற்பாடுகளும், சரியான வழிகாட்டுதல்களின்படி நிறைவு செய்யப்பட வேண்டும். இதன் மூலம், மேலே குறிப்பிட்ட பாடக்கருத்துகளை மிகவும் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். இந்த மொடியூலைக் கற்பதன் மூலம், நீங்கள் கருத்து ரீதியான புரிதலுடன், புவியியல் பாடத்தைக் கற்பதற்கு ஓர் இனிமையான சூழல் வழங்கப்படுகிறது.

திருமதி D.H.C.N. தர்மபால,
பணிப்பாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

## மொடியூலைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

- பாடசாலைத் தவணை ஆரம்பமானதோடு, உங்கள் கைகளுக்குக் கிடைத்துள்ள இந்த மொடியூலை முழுமையாக வாசிக்கவும். இதிலுள்ள செயற்பாடுகளுக்குரிய தரவுகளையும், தகவல்களையும் தவணை ஆரம்பத்திலிருந்து சேகரித்துக் கொள்ளவும். இதற்கான வழிகாட்டலை உங்கள் ஆசிரியர் வழங்குவார்.
- பெற்றோர்/ மூத்தோரின் பாதுகாப்பு மற்றும் உதவியுடன் அயற்சூழலில் அவதானிப்புகளை மேற்கொள்ள வேண்டும்.
- இணையத்தள வசதி இல்லாத மாணவர்கள், ஆசிரியரின் மாற்று வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றவும்.
- பிழையான தகவல்களால் உயர்ந்த அடைவினைப் பெறமுடியாது. எனவே நீங்கள் பெற்ற தகவல்கள் சரியானதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- செயற்பாடுகளின் மூலமாகக் கற்றறிந்த விடயங்களை சுயமதிப்பீடு செய்த பின்னர், திருப்தி இல்லையாயின், மீண்டும் அச்செயற்பாடுகளில் ஈடுபட்டு, குறித்த திறனை மேம்படுத்தவும்.
- இந்த மொடியூலிலுள்ள செயற்பாடுகளை நீங்கள் வெற்றிகரமாகப் பூரணப்படுத்துகையில் ஒரு கிறடிட் (Credit) உங்களுக்குக் கிடைக்கும்.

# சூழல் பல்வகைமையும் புவியியலும்



# உள்ளடக்கம்


**1. சூழல் பல்வகைமையும் புவியியலும்** **01 - 22**

1.1 அயற்சூழலின் பல்வகைமை **02**

1.2 இலங்கையின் சூழல் பல்வகைமை **05**

1.3 பூகோள சூழல் பல்வகைமை **13**

**2. பிரதேசத்தின் அமைவிடம்** **23 - 34**

2.1 இடங்களின் பெயர்களும் அவற்றுக்கான புவியியல் பின்னணியும்

**3. பிரதேசத்தின் அமைவிடத்தைப் படத்தில் குறித்தல்** **35 - 38**

**4. திட்டப்படம் ஒன்றினைத் தயாரித்தல்** **39 - 44**

4.1 இடம் ஒன்றின் சார்பமைவு **40**

4.2 பாடசாலையொன்றின் மாதிரித் திட்டப்படம் **42**

## எதிர்பார்க்கும் பேறுகள்

இந்த மொடியூலின் செயற்பாடுளை நீங்கள் வெற்றிகரமாகப் பூரணப்படுத்துகையில், பின்வரும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வீர்கள்.

- சூழல் பல்வகைமையின் (Diversity) ஊடாகப் புவியியலை அறிமுகப்படுத்தல்
- கிராமங்களின் பெயர்கள் உருவானமைக்கான புவியியல் காரணிகளைக் கண்டறிதல்
- பிரதேச அமைவிடத்தை (Location of the place) படவரை கலை நுட்பத்தின் மூலம் வெளிப்படுத்தல்
- பிரதேச அமைவிடத்தை பருமட்டான திட்டப்படத்தில் வரைந்து காட்டுதல்.



# 01 சூழல் பல்வகைமையும் புவியியலும்

எமது வாழிடமான புவி பற்றிய அறிவும் புரிதலும் அனைவருக்கும் பயனுடையதாகும். இதன் மூலம் புவிமேற்பரப்பில் காணப்படுகின்ற அனைத்து அம்சங்களும், இயற்கையில் இடம்பெறும் இடைத்தொடர்பு களின் விளைவுகளாக (Interaction) விளங்கிக் கொள்ளலாம். அதுபோல், மானிட சூழலானது (Human), மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான இடைத் தொடர்புகளால் உருவாகியுள்ளது எனவும் விளங்கிக் கொள்ளலாம்.

புவியிலுள்ள ஒவ்வொரு பிரதேசமும் அதன் தன்மையில் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. இப்பாடத்தின் ஊடாக, நாம் வாழும் புவியினது பல்வகைமையின் அற்புதத்தை அனுபவித்து, புவியியல் எனும் பாடத்தை அறிந்து கொள்வோம்.

**செயற்பாடு *01***



**பாடவேளை 6**

இச்செயற்பாட்டின் இறுதியில் பின்வரும் ஆற்றல் விருத்தியடையும்.

- நாம் வாழும் அயற்சூழல், இலங்கை மற்றும் உலகின் பல்வகைமையினை (Diversity) இனங்காணல்
- சூழல் பல்வகைமையினைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பெயரிடுதல்
- சூழல் பல்வகைமையினையும் அதன் எழிலினையும் அனுபவித்தல்
- புவியியல் என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்தல்
- இணையத்தளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழினுட்பத்திறனை விருத்தி செய்தல்
- புத்தாக்கத் திறனை விருத்தி செய்தல்
- தொடர்பாடல் திறனையும், முன்வைக்கும் ஆற்றலையும் விருத்தி செய்தல்
- நாட்டின் பிரசை என்ற வகையில் இலங்கை தொடர்பான அபிமானத்தை விருத்தி செய்தல்
- புவியியல் தொடர்பான சொற்களஞ்சியத்தையும் (Glossary), ஆங்கில அறிவினையும் விருத்தி செய்தல்.

# 1.1 அயற்சூழலின் பல்வகைமை

அயற்சூழலின் பல்வகைமையினை இனங்காண்பதற்காகப் பின்வரும் படங்களில் கவனம் செலுத்துவோம்.





- நீங்கள் மேலே அவதானித்த படங்களின் பொதுவான இயல்புகள் தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## படிமுறை 01

- ஆசிரியரின் வழிகாட்டலுக்கு ஏற்ப, வகுப்பிலுள்ள மாணவர்களைச் சில குழுக்களாக்குவோம். ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான தலைவரைத் தெரிவு செய்து, கீழே தரப்பட்டுள்ள செயற்பாட்டில் ஈடுபடுவோம்.
- இணையத்தளம் ஊடாக கூகுள் ஏர்த் ப்ரோ (Google earth pro) செயலியைப் பதிவிறக்கம் செய்யவும். பின்னர் அதன் மூலம் உங்கள் பாடசாலையின் அமைவிடத்தை அடையாளம் காணவும். அதன் பின்னர் அயற்சூழலின் பல்வேறு இடங்களையும் இனங்காணவும். அச்சூழலின் வேறுபட்ட இடங்களின் இயல்புகளைக் கண்டறியவும்.




*Source : https://www.google.com/earth/versions*

- அந்த அயற்சூழலை படம் (image) எடுக்கவும். அதனை அச்சுப் பதிப்பித்து, (Print out) மேலே உள்ள Google படிமத்தில் காட்டப்பட்டிருப்பது போன்று, உங்கள் பாடசாலைக்கு அருகிலுள்ள ஐந்து இடங்களைப் பெயரிடவும்.
- ஆசிரியரின் வழிகாட்டலுடன், பாடசாலையின் வெளிச்சூழலை நன்கு அவதானிக்கவும்.

  குறித்த சூழலைத் திறன்பேசி (Smart Phone) / கைக்கணினி (Tab) / புகைப்படக்கருவி (Camera)யைப் பயன்படுத்தி படமெடுக்கவும். (மூன்று படங்கள் போதுமானது)

  அல்லது குறித்த சூழலை சித்திரமாக வரையவும்.

  பின்னர் உங்கள் பாடசாலை அயற்சூழலின் பல்வகைமை தொடர்பாக வகுப்பறையில் கலந்துரையாடுக.

- உங்களால் எடுக்கப்பட்ட படங்களை அல்லது வரையப்பட்ட சித்திரத்தை குழுவின் ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். மறுநாள், அப்படங்கள் வெளிப்படுத்தும் பாடசாலை அயற்சூழலின் பல்வகைமையினை அடையாளம் காணவும்.
- அடையாளம் கண்ட பல்வகைமை தொடர்பாகக் குழுவினரோடு கலந்துரையாடவும். குறைந்தது மூன்று படங்களை உள்ளடக்கிய சுவர்ப் பத்திரிகை ஒன்றைத் தயாரிக்கவும்.
- பாடசாலையின் அயற்சூழல் தொடர்பாக உங்களால் தயாரிக்கப்பட்ட சுவர்ப்பத்திரிகையில் உள்ளடங்கியுள்ள தகவல்களை வகுப் பறையில் முன்வைக்கவும்.

(20 புள்ளிகள்)

**ஒப்படை 01**

1. பாடசாலை அயற்சூழலின் பல்வகைமை தொடர்பாக இதுவரை கற்றுக்கொண்டுள்ளீர்கள். தற்போது நீங்கள் வாழும் இடத்தின் அயற்சூழல் தொடர்பான படம் ஒன்றினை வரையவும்.
2. அப்படம் வெளிப்படுத்தும் பல்வகைமை தொடர்பாக மூன்று வாக்கியங்கள் எழுதவும்.



மேற்குறிப்பிட்ட செயற்பாட்டினூடாக, நீங்கள் வாழும் அயற்சூழலின் பல்வகைமை தொடர்பான சிறந்த தெளிவினைப் பெற்றிருப்பீர்கள். தற்பொழுது எமது நாட்டின் சூழல் பல்வகைமை தொடர்பான தகவல்களை அறிவோம்.

# 1.2 இலங்கையின் சூழல் பல்வகைமை



எமது நாடானது, பல்வகைமையான பிரதேசங்களைக் கொண்டதாகும். மறுபக்கத்திலுள்ள படங்கள் ஊடான செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். பிரதேசத்திற்குப் பிரதேசம் பல்வகைமை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை அப்படங்கள் ஊடாக அவதானிக்கவும்.

**படிமுறை 02**

கீழ்வரும் செயற்பாட்டின் மூலம் இலங்கையின் சூழல் பல்வகைமையினை அனுபவித்து மகிழுங்கள்.

- கீழ்வரும் படங்களின் வேறுபட்ட பண்புகளை நன்கு அவதானிக்கவும். அப்படங்கள் இலங்கையின் எப்பிரதேசங்களுக்குரியவை என்பதைக் கண்டறியவும். (மலைப் பிரதேசம், கடற்கரைப் பிரதேசம், கிராமப்புறங்கள், வட பிரதேசம், நகரப் பிரதேசம், காட்டுப் பிரதேசம், நகரச் சேரிகள், உலர்வலயம்) அதனை படத்தின் கீழுள்ள இடைவெளியில் எழுதுக.
- கண்டறிந்த பிரதேசங்களின் வேறுபட்ட அம்சங்களை அவதானிக்கவும். ஒவ்வொரு படத்திலும் காணக்கூடிய விசேட அம்சங்களையும் படத்தின் கீழுள்ள இடைவெளியில் எழுதுக.

(04 புள்ளிகள்)


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

................................................................................................................

................................................................................................................



................................................................................................................

................................................................................................................



.............................................................................................................

.............................................................................................................



.............................................................................................................

.............................................................................................................



.......................................................................................................

.......................................................................................................



.......................................................................................................

.......................................................................................................



........................................................................................................

........................................................................................................



........................................................................................................

........................................................................................................

## படிமுறை 03

- ஆசிரியரின் அறிவுறுத்தலின்படி குழுக்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- இலங்கையின் சூழல் பல்வகைமை தொடர்பாக ஆறு படங்களையேனும் சேகரிக்கவும்.

  பத்திரிகை, சஞ்சிகை, இணையத்தளம் ஆகியவற்றை இதற்காகப் பயன்படுத்தவும்.
- சேகரித்த அப்படங்களை ஏனைய குழுக்களுடன் பரிமாறி கலந்துரையாடலில் ஈடுபடவும். பின்னர் அவற்றை வகுப்பறையில் முன்வைக்கவும்.
- முன்வைப்பின் பின்னர், “இலங்கையின் சூழல் பல்வகைமை” தொடர்பாக மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(08 புள்ளிகள்)

## ஒப்படை 02

1. இலங்கையின் பிரதேச ரீதியான பல்வகைமையைத் தேடிய றிவோம்.

2. பெரியோரின் வழிகாட்டலுடன் வலையொளியைப் (You Tube) பயன்படுத்தி இலங்கையின் பல்வகைமையினை வெளிப்படுத்தக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள சுற்றுலாக் காணொளி களைப் பார்வையிடவும். அதிலுள்ள முக்கிய விடயங்களைக் குறித்துக் கொள்ளவும்.

3. சேகரித்த படங்கள் அல்லது நீங்கள் விரும்பும் காணொளியினைப் பார்வையிட்டதன் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி குறித்த பிரதேசத்தின் பல்வகைமை பற்றிய விவரங்களை உள்ளடக்கி பத்திரிகைக்கு (News paper) ஆக்கம் ஒன்றினைத் தயாரிக்குக.

## ஒப்படை 03

புவியியல் பாட ஆசிரியரின் உதவியுடன், அல்லது உங்கள் பாடசாலையிலுள்ள இலங்கை தேசப்படப் புத்தகத்தைப் பயன்படுத்தி, கீழேயுள்ள செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

இலங்கையின் வேறுபட்ட பிரதேசங்களின் இயற்கை வளங்கள் (Natural Resoures), மற்றும் அதன் தனித்துவம் போன்றவற்றின் பல்வகைமையைக் கண்டறிவதற்காகத் தரப்பட்டுள்ள ஒவ்வொன்றிற்கும் இரு உதாரணங்களை எழுதவும்.

- தரைத்தோற்ற வலயங்கள்
- காலநிலை வலயங்கள்
- மண் வகைகள்
- காடுகள்
- கனிய வளங்கள்
- பிரதான நதிகள்

மேலுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டதன் மூலம், நீங்கள் பின்வரும் விடயங்களை அறிந்து கொண்டீர்கள்.

- இலங்கையில் வேறுப்பட்ட தரைத்தோற்ற வலயங்கள் காணப் படுகின்றமை
- அந்த வேறுபட்ட வலயங்களின் தரைத்தோற்றமானது, ஒரே விதமாக காணப்படவில்லை
- மண்வகை, அனைத்து பிரதேசங்களிலும் ஒரே விதமாக காணப்படவில்லை
- காலநிலை, அனைத்து பிரதேசங்களிலும் ஒரே விதமாக காணப்படாது
- பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் காடுகள் காணப்படுகின்றன
- மனித நடவடிக்கைகளில் பல்வகைமை காணப்படுகிறது
- கனிய வளங்களின் பரம்பலில் வேறுபாடு காணப்படுகிறது
- கிராமம் மற்றும் நகர ரீதியாக பல்வகைமை காணப்படுகிறது

மேற்கூறிய அனைத்துக் காரணிகளின் மூலமும் “இலங்கை ஒரு பல்வகைமை கொண்ட நாடு” என்பது தற்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.



இலங்கையின் சூழல் பல்வகைமையும் அதற்கான காரணிகளும் பற்றி அறிந்து கொண்டுள்ளோம். நாம், தற்போது எமது புவிக்கோளத்தின் சூழல் பல்வகைமை பற்றி அறிந்து கொள்வோம்.

# 1.3 பூகோள சூழல் பல்வகைமை

- பனிப்பொழிவு மற்றும் கடுங்குளிர் பிரதேசமான ரஷ்யாவின் யாகுட்ஸ் (Yakutsk)





- நேபாளத்தின் மலைப்பாங்கான பிரதேசம்





▪ பாலைவனப் பிரதேசம்



மேலே காட்டப்பட்டுள்ள படங்களின் மூலம் உலகின் சுற்றுச் சூழலும் (Environment) மனித நடவடிக்கைகளும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றன என்பது தெளிவாகிறது. அந்தவகையில் பல்வகைமை உருவாகுவதற்கான காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- காலநிலைக் காரணிகள் (Climatic Factors) - மழைவீழ்ச்சி, வெப்பநிலை
- நீர் தொடர்பான காரணிகள் - சமுத்திரம், ஆறு, குளங்கள்
- நிலத்துடன் தொடர்பான காரணிகள் - மலைத்தொடர், பள்ளத்தாக்கு, சமவெளி, மண், பாறை
- உயிரியற் காரணிகள் - காடுகள் மற்றும் உயிரினங்கள்
- மானிட நடவடிக்கைகள் (Human activities) - வர்த்தகம் (Trade), போக்குவரத்து (Transport), கைத்தொழில் (Industries), விவசாயம் (Agriculture), அபிவிருத்தி (Development) மற்றும் வறுமை (Poverty)

**நாம் வாழும் புவியானது, சூழல் பல்வகைமை கொண்டது என்பதற்கான காரணிகள் யாவை என்பது, உங்களுக்கு தற்போது விளங்கியிருக்கும்.**

## படிமுறை 04

புவியில் காணப்படும் சூழல் பல்வகைமை தொடர்பாக மேலும் கற்றுக்கொள்ள கீழ்வரும் செயற்பாட்டில் ஈடுபடுவோம்.

- ஆசிரியரின் உதவியுடன் மாணவர்களைப் பொருத்தமான குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளில் இருந்து மூன்று தலைப்புகள் வீதம் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கவும்.
    - பாலைவனப் பிரதேசம்
    - குளிர்ப் பிரதேசம்
    - சமவெளி மற்றும் நதி ஊட்டப் பிரதேசங்கள் (River basins)
    - காட்டுப் பிரதேசம்
    - கரையோரப் பிரதேசம்
    - மலைப் பிரதேசம்
    - விவசாயப் பிரதேசம்
    - வரட்சியான பிரதேசம்
    - நகரப்பிரதேசம்
    - சேரிப்புறங்கள் (Slums)
- இதற்காக பத்திரிகை, சஞ்சிகை, இணையத்தளம் என்பவற்றைப் பயன்படுத்தவும். மேலே நீங்கள் தெரிவு செய்த மூன்று பிரதேசங்களையும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் இனங்கண்டு அவற்றை வெளிப்படுத்தக்கூடிய புகைப்படங்களைச் சேகரிக்கவும்.
- குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் சேகரித்த புகைப்படங்களை இணைத்து, **“பூகோள சூழல் பல்வகைமை”** எனும் தலைப்பில் புகைப்படக் கோவை ஒன்றைத் தயாரிக்கவும். (ஒரு பிரதேசத்திற்கு ஒரு தாள் வீதம் பயன்படுத்தவும்)
- அடுத்த பக்கத்திலுள்ள (பக்கம் 17) மாதிரி ஒழுங்கு முறைக்கு ஏற்ப புகைப்படக் கோவையின் பக்கங்களைத் தயாரிக்கவும்.

  பின்னர் படங்களின் கீழ், தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

(12 புள்ளிகள்)

## பாலைவனப் பிரதேசங்களும் (Desert Areas) அங்கு வாழும் மக்களும்






1. மேலுள்ள படங்களில் அவதானிக்கக் கூடிய இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக.

   ..........................................................................................................

   ..........................................................................................................

2. குறித்த பிரதேசத்தில் மானிடச் செயற்பாடுகளைத் தீர்மானிப்பதில் பங்களிப்புச் செய்த காரணிகளில் முதன்மை பெறுவது எது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

- உங்களால் தயாரிக்கப்பட்ட புகைப்படக் கோவையை மாணவர் களுடன் பகிர்ந்து நன்றாக அவதானிக்கவும்.
- அதனூடாக, கீழே தரப்பட்ட விடயங்கள் தொடர்பாக நீங்கள் விளங்கிக் கொண்டதற்கு எதிரே உள்ள கூட்டில் சரி (✓) அல்லது பிழை (✗) என அடையாளமிடுக.

| | |
|---|---|
| ◆ நாம் ஒவ்வொருவரும் வாழும் சூழல் பல்வகைமைக்குட்பட்டது | |
| ◆ மானிடச் செயற்பாடுகளே புவியின் சூழல் பல்வகைமைக்குப் பிரதான காரணம் ஆகும் | |
| ◆ நாம் வாழும் உலகில் மானிடப் பல்வகைமையும் காணப்படுகின்றது | |
| ◆ சூழல் பல்வகைமைக்கேற்ப மானிட நடவடிக்கைகள் வேறுபடும். | |

**உங்கள் அறிவுக்கு**



ஆசிரியரின் உதவியுடன், உலகின் வேறுபட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு, அதன் சூழல் பல்வகைமை பற்றி அறிந்து கொள்வோம்.

- நிவ்யோக் நகரம் (New York)
- சஹாராப் பாலைவனம் (Sahara Desert)
- தாராவி சேரிக்குடியிருப்புப் பிரதேசம் (Dharavi Slums)
- பியுஜியாமா எரிமலை (Fujiyama Volcano)
- அமேசன் காடுகள் (Amazon Forest)

மேலே தரப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பூரணப்படுத்தியதன் பின்பு, தரம்-6 இல் கல்வி பயிலும் மாணவர்களிடையே நடக்கின்ற உரையாடலை அவதானிப்போம்.






மேற்குறித்த செயற்பாடுகள் மற்றும் உரையாடலை நன்கு வாசித்து, புவியியல் பாடத்தில் நாம் கற்கும் விடயங்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். தற்போது அடுத்த படிமுறையிலுள்ள செயற்பாட்டில் ஈடுபடுவோம்.

**படிமுறை 05**

புவியியல் பாடத்தில் நாம் கற்றுக்கொள்பவை யாவை? இது பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதுக.

(04 புள்ளிகள்)



## புவியியலைக் கற்கும் போது.....

1. பௌதிகச்சூழல் (இயற்கை) பற்றிய அறிவு
2. மானிட நடவடிக்கைகளின் பல்வகைமை தொடர்பான தெளிவு
3. அயற்சூழலைத் திறந்த மனதுடன் நோக்குவதற்கான பழக்கம்
4. சூழலை நேசிக்கின்ற தலைமுறை உருவாகுவதற்கு அவசியமான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி
5. மனிதநேயத்துடன் செயற்படுவதற்கான வாய்ப்பு
6. சூழலைப் பாதுகாத்தல் (Environment Conservation), எண்ணக்கரு விருத்தி போன்ற ஆற்றல்கள் விருத்தியடையும்.

புவியியல் எண்ணக்கருக்களை நாம் ஏன் கற்க வேண்டும் என்பதை, ஓர் இளம் புவியியலாளராக விளங்கிக் கொள்வோம்



பௌதிகச்சூழலோடு இசைந்து சூழலின் ஓர் அங்கமாக நாம் வாழ்வதற்கான அடிப்படையை இதன் மூலம் பெற்றுக் கொள்வோம். அதற்கு சிறந்ததொரு ஆரம்பம் இதன் மூலம் கிடைக்கும்.

- நீங்கள் தற்போது பின்வருவனவற்றை விளங்கிக்கொள்ள முடியும்....
- இயற்கையால் வழங்கப்பட்டவற்றையே பௌதிகச் சூழலாக இனங்கண்டோம்
- பௌதிகச் சூழலுக்கும் மனிதனுக்கும் இடையில் நெருங்கிய இடைத்தொடர்பு காணப்படுகின்றது
- நீங்களும் சூழலுடன் எப்போதும் இடைத்தொடர்பினைப் பேணுகின்றீர்கள்
- புவியியலானது, மனிதனுக்கும் சூழலுக்குமிடையிலான இடைத் தொடர்பினை ஆராய்கிறது.

## சுய மதிப்பீடு
## செயற்பாடு 1

- பாடசாலையின் அயற்சூழல், இலங்கை மற்றும் பூகோளச் சூழல் பல்வகைமையைக் கற்றுக் கொண்டோம். இதன்மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் ஊடாக, கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்வோம். அத்துடன் கற்றவை தொடர்பாக மதிப்பீட்டிலும் ஈடுபடுவோம்.
- அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒரு நியதிக்கு ஒரு நட்சத்திரம் கிடைக்கும். உங்களால் எத்தனை நட்சத்திரங்களைப் பெற முடிகின்றது என்பதைப் பாருங்கள். பெற முடியாத நியதிகளுக்குரிய நட்சத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, அதற்குரிய பகுதியின் செயற்பாட்டினை மீளச்செய்து அவ் அறிவினை விருத்தி செய்து கொள்க.
- பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச நட்சத்திரங்களின் எண்ணிக்கை 6 ஆகும். நீங்கள் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களுக்கு விருப்பமான நிறம் தீட்டுக.

| தொ.இல. | நியதிகள் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1 | பாடசாலையின் அயற்சூழல், இலங்கை மற்றும் பூகோள பல்வகைமைக்கு உட்பட்ட இடங்கள், பிரதேசங்கள் மற்றும் நாடுகளைப் பெயரிட முடிதல். | ☆ |
| 2 | கூகுள் ஏர்த் ப்ரோவைப் பயன்படுத்தி பூகோளத்தின் எந்தவொரு இடம், பிரதேசம் மற்றும் நாட்டைத் தேட முடிதல். | ☆ |
| 3 | கூகுள் ஏர்த் பிரோ, வலையொளி (Google Earth pro, Youtube) போன்ற தளங்கள் ஊடாக படிமம் (images) மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிதல். | ☆ |
| 4 | சூழல் பல்வகைமையில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகளைப் பெயரிடுதல். | ☆ |
| 5 | புவியியல் பாடப்பரப்பினைச் சுருக்கமாக அறிமுகப்படுத்த முடிதல். | ☆ |
| 6 | திறன்பேசியைப் (Smart phone) பயன்படுத்தி ஒளிப் படங்கள், காணொளிகள் போன்றவற்றைப் பெற்று ஆசிரியருக்கு அனுப்ப முடிதல். | ☆ |

- நான் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களின் எண்ணிக்கை ............ ஆகும்.

# 02 பிரதேசத்தின் அமைவிடம் (Location of the area)

**செயற்பாடு 02**



**பாடவேளை 01**

**இச்செயற்பாட்டின் இறுதியில் பின்வரும் ஆற்றல் விருத்தியடையும்.**

- பிரதேசமொன்றின் தனித்துவத்தினையும் அதன் அடையாளத்தையும் விளங்கிக்கொண்டு வெளிப்படுத்தல்
- நீங்கள் வாழும் பிரதேசத்தின் பெயர் உருவாகியமைக்கான பின்னணியினைத் தெளிவுபடுத்தல்
- பிரதேசமொன்றின் பெயர் உருவாவதில் பங்களிப்பு செய்துள்ள பல்வேறு காரணிகளை இனங்கண்டு பெயரிடுதல்
- பிரதேசமொன்றின் அமைவிடத்தில் பங்களிப்புச் செய்த காரணிகளைத் தனித்தனியே அறிந்து கொள்ளல்
- கிராமங்களின் பெயர்கள் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்துள்ள புவியியல் காரணிகளை இனங்காணுதல்
- கிராமங்களின் பெயர்கள் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்துள்ள பௌதிக, மானிடக் காரணிகளைத் தனித்தனியே இனங்காணுதல்
- இலங்கையின் பல்வேறு பிரதேசங்கள் தொடர்பான அறிவினை விருத்தி செய்து கொள்ளல்.

**உங்களுக்குத் தெரியுமா?**

புவியிலுள்ள ஒவ்வொரு இடமும் சிறப்பானதும், தனித்துவமானதுமான அடையாளங்களைக் கொண்டுள்ளது.

- முக்கியமாக உங்கள் பாடசாலை / நீங்கள் வாழும் பிரதேசத்தின் அமைவிடமும் சிறப்பான தனித்துவத்தைத் (value) கொண்டிருக்கும்.
- ஒரு பிரதேசத்தின் தனித்துவத்தை அமைவிடம், தூரம், திசை போன்றவற்றின் மூலம் இலகுவாக இனங்காண முடியும்.
- இதனடிப்படையில் புவி மேற்பரப்பில் குறித்த ஓர் இடத்தை இனங்கண்டு கொள்வதற்கு,
  - ♦ குறித்த இடத்திற்கு வழங்கப்பட்டுள்ள பெயர்
  - ♦ அதன் அமைவிடம்

  போன்ற காரணிகள் முக்கியமானவையாகும்.

இவ்விடயம் தொடர்பாக நாம் மேலும் கற்போம்.

## 2.1 இடங்களின் பெயர்களும் அவற்றுக்கான புவியியல் பின்னணியும்

- நீங்கள் வாழும் இடம் எதுவென யாராவது கேட்டால், அப்பிரதேசத்தின் பெயரைக் குறிப்பிட்டே நாம் பதில் அளிப்போம்.
- அந்த வகையில் நீங்கள் வாழும் ஒவ்வொரு இடத்திற்கும் சிறப்பான பெயர் உள்ளது.

ஒவ்வொரு இடத்தினதும் பெயர் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் பல உள்ளன. அதனை பின்வரும் உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்வோம்.

## நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்களா?

மந்தாரம்நுவர

மலைத்தொடர்களால் சூழப்பட்டு சூரியஒளி கிடைக்கும் நேரம் மிகக் குறைவாக இருப்பதும், சிறிது இருள் சூழ்ந்து மந்தாரமாக காணப்படுவதனாலும் இப்பெயர் பெற்றுள்ளது. எனவே காலநிலைக் காரணியைக் கருத்திற் கொண்டு பெயர் பெற்ற ஊராக **“மந்தாரம்நுவர”** என்ற இடத்தினை அடையாளப்படுத்த முடியும்.



**சூரியஒளி குறைவாகக் கிடைப்பதுடன், பனித்தூறல் மற்றும் மழை ஏற்படுவது போன்ற தன்மையினை ‘மந்தாரம்’ என்போம்.**



பின்வரும் செயற்பாடுகளினூடாகக் குறிப்பிட்ட கிராமப் பெயர்களுக்குப் பின்னணியாக அமைந்த காரணிகளைத் தேடியறிவோம்.


9. டீச்சர் எங்களுக்கு அதைக்கேட்க மிகவும் ஆசையாக இருக்கின்றது. இன்னும் கொஞ்சம் சொல்லித்தாருங்கள்.
7. டீச்சர் எங்கள் ஊரின் பெயருக்கு அழகான பழைய கதை ஒன்று உள்ளது.
4. கிராமங்களுக்கு பெயர் வந்ததற்கு குளங்களும் காரணம் தானே டீச்சர்?
3. எமது கிராமம் அதிக உயரத்தில் இருப்பதால், அதற்கு உடுகம என்ற பெயர் வந்தது. பள்ளத்தில் அமைந்துள்ள கிராமம் பஹளகம
2. ஆமாம் டீச்சர், எங்கள் கிராமத்திற்குப் பெயர் வந்த விதத்தை எங்கள் அம்மம்மாவும் கூறியுள்ளார்.


1. பிள்ளைகளே 'மந்தாரம் நுவர' என்ற பெயர் ஏன் வந்தது என்று உங்களுக்குத் தெளிவாகப் புரிந்திருக்கும். அதேபோல, இலங்கையில் பல கிராமங்களின் பெயர்கள் சில காரணிகளுடனேயே உருவாகியுள்ளன.
5. ஆம் பிள்ளைகளே..! குளங்களால் மட்டுமல்ல ஆறுகள், கால்வாய்கள், நீரூற்றுகள் காரணமாகவும் பெயர்கள் உருவாகியுள்ளன.
6. வேறு, எவ்வாறு உங்கள் கிராமத் திற்குப் பெயர் வந்துள்ளது?
8. ஆம், பல கிராமங்களுக்கு அழகான கதைகள் உள்ளன
10. சரி! கிராமங்களுக்குப் பெயர்கள் உருவான விதத்தைக் கண்டுபிடிப்போம். அதற்கு தேசப்படப் புத்தகத்தைப் பார்ப்போம். அதில் கிராமப் பெயர்களைக் கண்டுபிடிக்க நீங்களும் உதவுங்கள்.

ஆந்தாபான (Andapana) :
பெரிய விலாங்கு (Eel) மீன் ஒன்று தென்பட்டதால் அப்பெயர் பெற்றது.



மணற்காடு (Manalkadu):
மணற்குன்றுகள் அடர்த்தியாக பரம்பி காணப்படுவதால் அப்பெயர் பெற்றது.



கசூரினா (Csuarina) :
சவுக்கு மரங்கள் அடர்ந்து காணப்படு வதால் அப்பெயர் பெற்றது.



நியந்தகல (Niyandagala) :
நியந்த புதர்களால் (பாம்பு போன்ற ஒரு வகைத் தாவரம்) சூழப்பெற்ற குன்றுப் பகுதிக்கு அப்பெயர் பெற்றது.



மேலே தரப்பட்ட தகவல்களைப் போன்று, உங்கள் கிராமத்தின் பெயர் உருவாகிய விதத்தினைத் தேடி அறியவும்.

## படிமுறை 01

கீழேயுள்ள இலங்கைத் தேசப்படத்தில் கிராமப் பெயர்கள் சில தரப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு இச்செயற்பாட்டை மேற்கொள்ளவும்.

- ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கமைய மாணவர்களைப் பொருத்தமான குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேசப்படத்தில் காணப்படும் கிராமப் பெயர்களை நன்கு அவதானியுங்கள்.
- பின்னர், தேசப்படத்தின் கீழுள்ள அட்டவணையின் வகைப்படுத்தலை கவனமாக அவதானிக்கவும். அதற்கேற்ப அவதானித்த கிராமப் பெயர்களையும் அதன் உருவாக்கத்தில் தாக்கம் செலுத்திய காரணிகளையும், அட்டவணையில் வேறுபடுத்தி எழுதவும்.
- குறித்த அட்டவணையை ஒவ்வொரு குழுவும் தனித்தனியே பூரணப்படுத்தவும்.
- வகைப்படுத்திய கிராமப் பெயர்களை காரணிகளுடன் வகுப்பில் முன்வைக்கவும்.

## தேசப்படம் : இலங்கையின் மாகாணங்களும் சில கிராமப் பெயர்களும்



## கிராமங்களின் பெயர்கள் உருவானமைக்குப் பின்னணியாக அமைந்த காரணிகள்

| கிராமப் பெயர்களின் உருவாக்கத்திற்கு பின்னணியாக அமைந்த காரணிகள் (கிடையாக) | ..................... | ..................... | ..................... | ..................... |
| --- | --- | --- | --- | --- |
| கிராமப் பெயர்கள் (குத்தாக) | .....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>..................... | .....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>..................... | .....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>..................... | .....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>.....................<br>..................... |

01. நீங்கள் அறிந்து கொண்ட கிராமப் பெயர்கள் உருவாகியமைக்கான காரணிகளை பௌதிக, மானிடக் காரணிகள் என இரு வகைப்படுத்தி அட்டவணையில் எழுதவும்.

| பௌதிகக் காரணிகள் | மானிடக் காரணிகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

02. மேற்குறித்த வகைப்படுத்தலின் போது, உங்களால் இனங்காணக்கூடிய முக்கிய முடிவினைக் குறிப்பிடுக.

...........................................................................................

(12 புள்ளிகள்)

**மேலதிக அறிவுக்காக...**

1. கூகுள் படிமம் (Google Map) அல்லது தேசப்படப் புத்தகத்தைப் பயன்படுத்தி உங்கள் கிராமத்தினைத் தேடியறியவும்.
2. உங்கள் கிராமம் அமைந்துள்ள மாகாணத்தை அடையாளம் காணவும்.
3. அந்த மாகாணத்தைச் சூழவுள்ள இரு மாகாணங்களைப் பெயரிடுக.
4. குறித்த மூன்று மாகாணங்களிலும் அமைந்துள்ள பொருத்தமான கிராமப் பெயர்களைத் தேடியறியவும்.
5. முன்னர் மேலே குறிப்பிட்ட அட்டவணையில் வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ள காரணிகளைப் போன்று, நீங்கள் கண்டறிந்த கிராமங்களையும் வகைப்படுத்திக் காட்டவும்.

## படிமுறை 02

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு படப்பிரதேசத்தையும் நன்றாக அவதானிக்கவும். பின்னர் அதிலுள்ள முக்கிய புவியியல் காரணியைக் கண்டறியவும் (Geographical Factor). அதனை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பிரதேசங்களை அழைப்பதற்குப் பொருத்தமான கிராமப் பெயர்களை முன்மொழியவும்.



..............................................................



..............................................................



..............................................................



..............................................................



..............................................................



..............................................................

(04 புள்ளிகள்)

காலநிலை, தரைத்தோற்றம், மண், நீர்நிலைகள், தாவரங்கள் போன்றன **பௌதிக காரணிகள்** (Physical factors) எனவும், கலாசாரம் போன்றன **பௌதிகம் அல்லாத காரணிகள்** (Non Physical factors) எனவும் குறிப்பிடலாம்.
இவை இரண்டும் **புவியியல் காரணிகள்** (Geographical factors) எனவும் இனங்காணப்படும்.



## சுய மதிப்பீடு
## செயற்பாடு 2

- இடங்களின் பெயர்களுக்கு அடிப்படையாக அமைந்த புவியியல் பின்னணியை அறிந்து கொண்டோம். நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவினைச் சுயமதிப்பீடு செய்வதற்காகப் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக.

- அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒரு நியதிக்கு ஒரு நட்சத்திரம் கிடைக்கும். உங்களால் எத்தனை நட்சத்திரங்களைப் பெற முடிகின்றது என்பதைப் பாருங்கள். பெறமுடியாத நியதிகளுக்குரிய நட்சத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்குரிய செயற்பாட்டினை மீண்டும் செய்து அவ்வறிவினை விருத்தி செய்க.

- பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச நட்சத்திரங்கள் 6 ஆகும். நீங்கள் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களுக்கு விருப்பமான நிறம் தீட்டுக.

| தொ.இல | நியதிகள் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1 | எனது ஊரின் பெயர் உருவான விதத்தினை முன்வைக்க முடியும். | ☆ |
| 2 | ஊர்களின் பெயர்கள் உருவானதற்குப் பின்னணியாக இருந்த காரணிகளை என்னால் முன்வைக்க முடியும். | ☆ |
| 3 | ஊர்களின் பெயர்களுக்கான பின்னணிக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை வகைப்படுத்திப் பட்டியலிட என்னால் முடியும். | ☆ |
| 4 | கிராமங்களின் பெயர்கள் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்துள்ள பௌதிக, மானிடக் காரணிகளை (என்னால்) வேறுபடுத்தி அறிந்து பெயரிட முடியும். | ☆ |
| 5 | வழங்கப்படும் பிரதேசத்திற்குப் பொருத்தமான பெயரொன்றை என்னால் குறிப்பிட முடியும். | ☆ |
| 6 | இலங்கையின் பல்வேறு பிரதேசங்களின் பெயர்கள் உருவாக்கத்தில் பின்னணியாக அமைந்த காரணிகளை என்னால் பகுப்பாய்வு செய்து அறிந்து கொள்ள முடியும். | ☆ |

- நான் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களின் எண்ணிக்கை .........ஆகும்.

# 03 பிரதேசத்தின் அமைவிடத்தைப் படத்தில் குறித்தல்

**செயற்பாடு *03***

**பாடவேளை 02**

**இச்செயற்பாட்டின் இறுதியில் பின்வரும் ஆற்றல் விருத்தியடையும்.**

- ♦ படங்கள் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல்
- ♦ உங்கள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தின் அமைவிடத்தை படவரைகலை நுட்ப ரீதியில் அறிந்து கொள்ளுதல்
- ♦ பல்வேறு நிர்வாக எல்லைகளை இனங்கண்டு பெயரிடுதல்
- ♦ உங்கள் பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவின் அமைவிடம் பற்றிய கருத்துக்களை முன்வைத்தல்
- ♦ உங்கள் பாடசாலையின் அமைவிடப் பிரதேசம் பற்றி படவரைகலை நுட்ப ரீதியாக கருத்துக்களை முன்வைத்தல்

▪ கீழ்வரும் உரையாடலின் உதவியுடன் பிரதேசங்களின் அமைவிடங்-களை அறிவோம்.

- மாகாணங்களுக்கு இடையிலான புவியியல் வினாவிடைப் போட்டியில், தரம் - 6 மாணவர்களான ராஜினி மற்றும் தேனுஸ் ஆகியோரிடையே இடம்பெற்ற, பின்வரும் உரையாடலின் அடிப்படையில் பிரதேசமொன்றின் அமைவிடத்தினைக் கண்டறிவோம்.






**மேலதிகமாக...**

ராஜினி மற்றும் தேனுஸ் ஆகியோர் உரையாடியது போன்று, பின்வரும் செயற்பாட்டினூடாக உங்கள் பாடசாலையின் அமைவிடத்தினையும் உங்களால் குறிப்பிட முடியும்.



உங்கள் பாடசாலையின் முழுப்பெயரினை அவதானிக்கவும்.
பாடசாலை அமையப்பெற்ற மாகாணம், மாவட்டத்தை இனங்காணக் கூடியதாக உள்ளதா என அறிந்து கொள்ளவும்.

## படிமுறை 01

உங்களது பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை எழுதுக.

1. பாடசாலையின் முழுப்பெயர் ..................................................
2. கிராமசேவகர் பிரிவு ........................................................
3. பிரதேச செயலகப் பிரிவு ..................................................
4. மாவட்டம் .................................................................
5. மாகாணம் ...............................................................

(04 புள்ளிகள்)

## படிமுறை 02

- நீங்கள் கல்வி கற்கும் பாடசாலைக்குரிய, மாகாண எல்லைக்கோட்டை அருகில் உள்ள இலங்கைப் படத்தில் வரைக.
- அந்த மாவட்டத்தை இளநிறத்தால் நிறந் தீட்டுக.
- அந்த மாவட்டத்தில் அமையப் பெற்ற முக்கிய நகரத்தைக் குறித்துப் பெயரிடுக.
- படம் குறிப்பது தொடர்பான உதவிகளைப் பெற பொருத்தமான இணையத்தள முகவரியைப் பயன்படுத்தவும்.



(08 புள்ளிகள்)

**மேலதிகமாக....**

- இலங்கைப் புறவுருவப் படமொன்றில் உங்கள் பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்திற்கு அருகிலுள்ள 3 மாவட்டங்களையும் மாகாணங்களையும் குறித்துப் பெயரிடுக.
- பின்னர், ஏனைய அனைத்து மாகாணங்கள், மாவட்டங்களையும் குறித்துப் பெயரிடுக.

தேசப்படத்தில் பிரதேசங்களின் அமைவிடத்தைப் பிழையின்றிக் குறிப்பதற்கான திறனைப் பெற்றுக்கொண்டீர்கள். திசைகளின் அடிப்படையில், பிரதேசங்களின் சார்பு அமைவிடத்தை (Relative location) அறிந்து கொண்டு, திட்டப்படத்தினை வரையும் திறனை வளர்த்துக் கொள்வோம்.

## சுய மதிப்பீடு
## செயற்பாடு 3

- படங்களைக் குறித்தல் செயற்பாட்டின் ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவினை மதிப்பீடு செய்வதற்காகப் பின்வரும் அட்டவணையைப் பயன் படுத்துவோம்.

- அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒரு நியதிக்கு ஒரு நட்சத்திரம் கிடைக்கும். உங்களால் எத்தனை நட்சத்திரங்களைப் பெற முடிகின்றது என்பதைப் பாருங்கள். பெறமுடியாத நியதிகளுக்குரிய நட்சத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்குரிய செயற்பாட்டினை மீண்டும் செய்து அவ்வறிவினை விருத்தி செய்வோம்.

- பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச நட்சத்திரங்கள் 6 ஆகும். நீங்கள் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களுக்கு விருப்பமான நிறம் தீட்டுக.

| தொ.இல | நியதிகள் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1 | எனது பாடசாலையின் மாகாணம், மாவட்டம், பிரதேச செயாலாளர் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பவற்றைப் பெயரிட முடியும். | ☆ |
| 2 | எனது பாடசாலையின் மாகாணத்தைச் சூழவுள்ள ஏனைய மாகாணங்களைப் பெயரிட முடியும். | ☆ |
| 3 | எனது பாடசாலையின் மாவட்டத்தைச் சூழவுள்ள ஏனைய மாவட்டங்களைப் பெயரிட முடியும். | ☆ |
| 4 | எனது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் முக்கிய நகரத்தை இனங்கண்டு குறித்துப் பெயரிட முடியும். | ☆ |
| 5 | நான் கல்வி கற்கும் பாடசாலையின் மாகாண எல்லை மற்றும் மாவட்டத்தை வரைவதற்கும் நிறந்தீட்டிக் காட்டுவதற்கும் முடியும்.“ | ☆ |
| 6 | படம் ஒன்றை குறிப்பதற்கான தகவல்களை இணையத்தளத்தைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். | ☆ |

- நான் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களின் எண்ணிக்கை ......... ஆகும்.

# 04 திட்டப்படம் ஒன்றினைத் தயாரித்தல்



## செயற்பாடு 04

பாடவேளை 03

**இச்செயற்பாட்டின் இறுதியில் பின்வரும் ஆற்றல் விருத்தியடையும்.**

- திசைகளை அடிப்படையாகக் கொண்டு அமைவிடத்தினை இனங்காணுதல்
- பாடசாலை வளாகம் மற்றும் அதன் அயற்சூழல் தொடர்பான சிறந்த விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ளல்
- வர்ணங்கள், எழுத்துகள் மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்தி திட்டப்படத்தை வரைந்து காட்டுதல்.

பிரதேச அமைவிடம் தொடர்பாக, நாம் இதுவரை கற்றுக்கொண்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு, எமது பாடசாலையின் திட்டப்படத்தை வரைவோம்.

**திட்டப்படம் என்பது...**

- இலகுவான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி பிரதேசத்தின் அல்லது இடமொன்றின் அமைவிடத்தை மாதிரிப்படத்தில் வரைவதாகும்.
- திசை மற்றும் கிட்டிய தூரத்தின் அடிப்படையில் இத் திட்டப்படம் வரையப்படுகின்றது.

**மாதிரி திட்டப்படத்தினை வரைவதற்கான படிமுறைகள்**

பிரதேசம் ஒன்றின் அமைவிடத்தினை பருமட்டாகக் (Approximately) கண்டறிதல்

- திசையை அறிந்து கொள்ளுதல்
- பாடசாலை சூழல் மற்றும் அயற்சூழல் தொடர்பாக அறிந்து கொள்ளுதல்
- பாடசாலையின் அயற்சூழலில் அமைந்துள்ள இடங்களை திசைகளுடன் அறிதல்
- பருமட்டான படம் வரைதல் (Sketch)
- பருமட்டான படத்திலிருந்து திட்டப்படத்தை வரைதல்

**திட்டப்படம் ஒன்றில்.........**

- பிரதேசத்தின் அமைவிடம் பருமட்டாகக் காட்டப்பட்டிருக்கும்
- எளிமையான சில குறியீடுகள் மற்றும் நிறங்கள் பயன்படுத்தப்படும்.

## 4.1 இடமொன்றின் சார்பமைவு (Relative Location)

### திசை



எந்தவொரு பிரதேசத்தினதும் சார்பு அமைவை (Relative Location) அறிந்து கொள்வதற்குத் திசைகள் அவசியமாகின்றன.

1. திசைகளை (Direction) அறிந்து கொள்ளும் முறைகள் மிக முக்கியமானதாகும்.
2. திசைகாட்டியைப் (Compass) பயன்படுத்தி, திசைகளைப் பிழையின்றி அறிந்து கொள்ளலாம்.
3. திசைகாட்டி இல்லாதபோது, பிரதேசத்தின் சார்பு அமைவினை அறிந்து கொள்ள, சூரியன் உதிக்கும் திசையை அடிப்படையாகக் கொள்ளலாம்.

## படிமுறை 01

மாதிரித் திட்டப்படம் பற்றிய விளக்கத்துடன் திசைகாட்டியைப் பயன்படுத்தி, ஒரு பிரதேசத்தின் அமைவிடத்தை மாதிரியாக வரைந்து காட்டும் திறனைப் பெற முயற்சிப்போம்.

1. ஆசிரியரின் அறிவுறுத்தலின்படி குழுக்களை அமைத்துக் கொள்ளுங்கள்.
2. கடதாசி ஒன்றில் பிரதான திசைகள் நான்கினையும் உப திசைகள் நான்கினையும் குறித்துக் கொள்வோம்.
3. பாடசாலையை முழுமையாகப் பார்க்கக் கூடிய ஓர் இடத்திற்குச் சென்று, உங்களிடமுள்ள திசைகாட்டியை கிழக்குத் திசை அமையுமாறு வைத்துக்கொள்ளவும். இதன்போது அனைத்துத் திசைகளும் சரியான ஒழுங்கில் அமைந்திருக்கும்.
4. எமக்குத் தெரியும் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் வேறு விசேட இடங்களின் அமைவிடங்களைத் திசை மற்றும் சார்பளவு தூரத்திற்கு ஏற்ப இனங்காண்போம்.
5. அவற்றைப் பெயரிட்டுக் குறிப்பொன்றில் குறித்துக் கொள்வோம்.
6. பின்னர், வகுப்பறைக்குச் சென்று பாடசாலையின் கட்டடங்களை அமைவிடரீதியாக திட்டப்படத்தில் வரைவோம்.
7. பாடசாலை ஒன்றின் மாதிரித் திட்டப்படம் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு, திட்டப்படம் பற்றி மேலும் விளங்கிக்கொள்வோம்.

(16 புள்ளிகள்)

## 4.2 பாடசாலை ஒன்றின் திட்டப்படம் (மாதிரி)




| | |
|---|---|
| 1. கட்டடம் A | 7. மலசலகூடம் |
| 2. உணவகம் | 8. மைதானம் |
| 3. அலுவலகம் | 9. சமயத்தலம் |
| 4. நுழைவாயில் | 10. நூலகம் |
| 5. ஆய்வுகூடம் | 11. கிணறு |
| 6. கட்டடம் B | |

மேலுள்ள படத்தின் ஒவ்வொரு அமைவிடத்துக்கும் ஒவ்வொரு குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அமைவிடங்களைக் காட்டும் போது, இக்குறியீடுகளையே பயன்படுத்த வேண்டும் என்று அவசியமில்லை. இதற்காக, நீங்கள் விரும்பிய நிறங்கள் மற்றும் குறியீடுகள் சிலவற்றைப் பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

## படிமுறை 02

- பாடசாலை வளாகத்தின் மாதிரித் திட்டப்படத்தினை வரைந்த அனுபவம் உங்களுக்குள்ளது. திசைகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையை அண்மித்த சூழலிலுள்ள எட்டு இடங்களைக் குறிப்பிடுக.
- அந்த இடங்களுக்கு இடையிலான அண்ணளவான தூரத்தைப் பாடசாலையிலிருந்து கணக்கிட்டுக் குறிப்பிடுக.
- பாடசாலை அயற்சூழலின் மாதிரித் திட்டப்படத்தினை உங்களின் விருப்பத்திற்கிணங்க பொருத்தமான குறியீடுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி வரையவும்.

(08 புள்ளிகள்)

**நீங்கள் வாழும் பிரதேசத்தின் அமைவிடம் தொடர்பான விளக்கத்தைத் தரப்பட்டுள்ள செயற்பாட்டினூடாக உறுதிப்படுத்திக் கொள்ளவும்.**





## சுய மதிப்பீடு
## செயற்பாடு 4

- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் ஊடாக, நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நட்சத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பிட முடியும்.

- அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒரு நியதிக்கு ஒரு நட்சத்திரம் கிடைக்கும். உங்களால் எத்தனை நட்சத்திரங்களைப் பெற முடிகின்றது என்பதைப் பாருங்கள். பெறமுடியாத நியதிகளுக்குரிய நட்சத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்குரிய செயற்பாட்டினை மீளச்செய்து அவ்வறிவினை விருத்தி செய்க.

- பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச நட்சத்திரங்கள் 4 ஆகும். நீங்கள் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களுக்கு விருப்பமான நிறம் தீட்டுக.

| தொ.இல | நியதிகள் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1 | திட்டப்படத்தை வரையும் படிமுறைகள் யாவும் எனக்குத் தெரியும். (சார்பு அமைவு, தூரம் தொடர்பான அறிவு) | ☆ |
| 2 | ஒரு திட்டப்படத்தில் காணப்பட வேண்டிய அடிப்படை அம்சங்கள் எவையெனத் தெரியும். (திசை, குறியீடுகள், பெயர்) | ☆ |
| 3 | திட்டப்படத்தின் ஊடாக அமைவிடத்தை அறிந்துகொள்ள முடியும். | ☆ |
| 4 | திட்டப்படத்தின் பயன்பாடு குறித்த அறிவு எனக்குள்ளது. | ☆ |

- நான் பெற்றுக்கொண்ட நட்சத்திரங்களின் எண்ணிக்கை ................ ஆகும்